Te Kāwanatanga o Aotearoa
New Zealand Government

# Pae ora | அனைத்து நியூ சிலாந்து மக்களுக்குமான ஆரோக்கியமான எதிர்காலம்

## சுகாதாரத்திற்கான அரசு கொள்கை அறிக்கை: 2022-2024

E ngā mātāwaka huri noa, tēnā koutou katoa

நமது சுகாதார துறை வலுவான அடித்தளங்களை கொண்டுள்ளது: மிகவும் திறம் வாய்ந்த மற்றும் அர்பணிப்புமிக்க ஊழியர் படை, ஈடுபாடு மற்றும் பேரார்வம் கொண்ட சமூகங்கள் மற்றும் ஒன்றிணைந்து பணியாற்றி வேலைகளை தேவைப்படும்போதெல்லாம் நிறைவேற்றும் திறன். இருந்தும் முன்னேற்றங்களை காணக்கூடிய வாய்ப்புகள் உள்ளன மற்றும் இப்போதைவிட மேலும் சிறப்பாக செயல்படும் ஒரு எதிர்கால சுகாதார அமைப்பை கட்டமைக்க வேண்டியுள்ளது போன்றவன பற்றி நாம் அறிவோம்.

நீண்ட காலமாக பல்வேறு சுகாதார முடிவுகளை உற்றுநோக்குகையில் ஒரு சில குழுக்கள் தொடர்ச்சியாக குறைவான சேவையை பெறுகின்றன மற்றும் புறக்கணிக்கப்படுகின்றன: மாவோரி, பசிபிக் இனங்கள், ஊனமுற்றவர்கள் மற்றும் சுகாதார நிலை கலாச்சாரம், இனம், பாலினம், பாலியல் விருப்பம், வசிப்பிடம், வருமானம் மற்றும் வேறுபல காரணிகளின் அடிப்படையில் பாகுபாட்டை எதிர்கொள்கிறவர்கள்.

இந்த நீண்டநாள் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஒரு புதிய சுகாதார அமைப்பு வழங்கும். மேலும் இது Te Tiritiக்கு உகந்தது, நியாயமானது, ஒத்ததானது மற்றும் whānau-வை மையமாக கொண்டது. இவ்வாறு செய்வதன் மூலம் அது நிலையானது, மீள்திறன் கொண்டது மற்றும் செலவு ஏற்புடையதாக இருந்து எதிர்கால தலைமுறைகளுக்கு அது கிடைக்கப்பெறுவதையும் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதையும் உறுதிபடுத்துகிறது.

நமது தொலைநோக்கு பார்வை எளிதானது: அனைத்து நியூசிலாந்து பிரஜைகளும் pae ora ஐ அடைவது (சுகாதாரமான எதிர்காலங்கள்) இதன் அர்த்தம் என்னவென்றால் மக்களும் whānauவும் நீண்ட ஆயுளுடன் கூடிய நல்ல உடலாரோக்கியம் மற்றும் மேம்பட்ட சுகாதாரம் மற்றும் வாழ்க்கை தரத்தை பெறுகின்றனர் என்பது மட்டுமல்லாமல் அவர்கள் ஆரோக்கியம் உள்ளடக்கும் மற்றும் மீள்திறன் கொண்ட சமூகங்களில் ஒரு அங்கம் வகிப்பார்கள் மற்றும் அவர்களின் நல்வாழ்வை நீடிக்க உதவும் சூழ்நிலைகளில் வாழ்வார்கள் என்பதும்தான்.

அரசு கொள்கை அறிக்கை சேவைகள், முன்னெடுப்புகள் மற்றும் கூட்டுறவுகளை ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை பாதுகாக்க, பேண மற்றும் மேம்படுத்த, சமதர்மத்தை நிலைநாட்ட மற்றும் pae ora வை வழங்க உதவும் பொருட்டு சுகாதார அமைப்பின் மீதான அரசின் எதிர்பார்ப்புகளை கோடிட்டு காட்டுகிறது.

மாற்றத்தை நாம் ஓரிரவில் பெற முடியாது: அதற்கு நேரம், முதலீடு மற்றும் நமது சுகாதார துறையிலுள்ள அனைத்து முக்கியஸ்தர்கள் மற்றும் மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பு தேவை. இந்த இடைக்கால அரசு கொள்கை அறிக்கை இப்பயணத்தின் துவக்கமே. இது சீர்திருத்தப்பட்ட அமைப்பின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கான அரசின் முன்னுரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அமைக்கிறது.

Nō reira, tēnā koutou katoa

ஆன்ட்ரூ லிட்டில், சுகாதார அமைச்சர்

**இடைக்கால அரசு கொள்கை அறிக்கை புதிய சுகாதார அமைப்பை** இயக்கி ஆட்டேரோவா நியூ சிலாந்தில் இந்த பொது-நிதி ஆதரவில் செயல்படுத்தப்படும் சுகாதார அமைப்பின் முன்னுரிமைகள், குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை அமைக்கிறது.

இது அரசாங்கம் சுகாதார அமைப்பிற்குள் எதை வழங்கி எட்டப்படுவதற்கு எதிர்பார்க்கிறது என்பதையும் எவ்வாறு திட்டத்தின் செயல்பாடு அளவிடப்படும், கண்காணிக்கப்படும் மற்றும் தெரிவிக்கப்படும் என்பதையும் கோடிட்டு காட்டுகிறது.

இந்த இடைக்கால அரசு கொள்கை அறிக்கை இரண்டு வருடங்கள் மீது கவனம் செலுத்துகிறது – ஜூலை 2022 முதல் ஜூன் 2024 வரை – மற்றும் நிறைவேற்றப்பட அதிக காலம் தேவைப்படும் நீண்ட கால வழிநடத்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் முடிவுகளுக்கான அடித்தளத்தை அமைக்கிறது.

இது எவ்வாறு பல்வேறு சுகாதார அமைப்புகள் அரசின் முன்னுரிமைகள் மற்றும் சுகாதார சேவைகளை அனைத்து நியூசிலாந்து பிரஜைகளுக்கும் செயல்படுத்துவார்கள் என்பதை கோடிட்டு காட்டும் நியூ சிலாந்து சுகாதார திட்டத்திற்கான எதிர்பார்ப்புகளையும் அமைக்கிறது.

**இந்த முழு இடைக்கால அரசு கொள்கை** அறிக்கை ஆவணத்தை **சுகாதார துறை அமைச்சக வலைதளத்தில் காணப்பெறலாம்.**

# தீவிர முன்னுரிமைகள்

**சுகாதார அமைப்பை வழிநடத்தவும் சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதை வழிநடத்தவும் அரசு கொள்கை அறிக்கை ஆறு முன்னுரிமை பிரிவுகளை கொண்டுள்ளது.**

## Te Tiriti o Waitangi ஐ சுகாதார அமைப்பின் முழுதும் பொதிய வைப்பது

Māoriக்கள் வாழ்வதற்கு வளர்ச்சி காண்பதற்கு மற்றும் Māoriக்களாக செழித்தோங்க Māoriக்கள் தங்கள் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மீது ஆதிக்கம் செலுத்தவும் சமதர்ம சுகாதார முடிவுகளை எட்டவும் திறன் படைத்தவர்கள். சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- வலுவூட்டப்பட்ட Māori தலைமை மற்றும் முடிவெடுத்தல்
- kaupapa Māori மற்றும் whānauவை மையப்படுத்தும் சேவைகளுக்கான அதிகரித்த அணுகல்

## எதிர்கால சுகாதார அமைப்பின் வெற்றிக்கான அடித்தளத்தையிடுதல்

Te Tiriti அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட புதிய கலாச்சாரம் மற்றும் நன்னெறிகளானது முன்தடுப்பு மீதான முனைப்பை வலுவூட்டுவதற்கு உருவாக்கப்பட்டு மக்கள் மற்றும் whānau இவர்களின் நல்வாழ்வை பாதுகாக்கவும் பேணவும் உதவுகிறது. சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- சமூகங்களுடனும் மற்ற அமைப்புகளுடனும் கைகோர்த்து அவர்களுடன் கூட்டுறவில் ஒன்றிணைந்து பணியாற்றுவது
- நுகர்வோர், whānau மற்றும் சமூகத்தின் குரல்கள் அமைப்பில் எதிரொலித்து அணுகல், பராமரிப்பு தரம் மற்றும் முடிவுகள் ஆகியனவற்றில் சமதர்மத்தை எட்ட உதவுவதில் முன்னேற்றத்திற்கு உதவுவது.

## மக்களை அவர்கள் சமூகங்களுக்குள்ளேயே நலமாக வைத்திருப்பது

சமூகம்-சார்ந்த தடுப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது, அவற்றிற்கு whānau-வை மையப்படுத்திய முனைப்பு மற்றும் கலாச்சார பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்விற்கு ஏற்ப தகவமைப்பது--குறிப்பாக அவர்கள் வசிக்கும், பணிபுரியும் மற்றும் விளையாடும் இடத்திற்கு மிக அருகில். சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- உடனடி நடவடிக்கை, டிஜிட்டல் சேவைகள் மற்றும் மருத்துவமனை சங்கிலித்தொடர்கள் உட்பட அனைத்து சுகாதார சேவைகளிலும் மேம்படுத்தப்பட்ட சேவை விநியோகம் மற்றும் சுகாதார பராமரிப்பில் நியாயப்படுத்தாத விலகலை கண்டறிந்து களைவது
- சுகாதார சேவைகள் முடங்காமலிருப்பது மற்றும் பராமரிப்பை நாடுவதில் மக்கள் பாதுகாப்பாக உணர்வது

## சுகாதார முடிவுகளில் சமதர்மத்தை நிலைநாட்டுவது

பல்வேறு தேவைகள் மற்றும் நன்மையின் பல்வேறு அடுக்குகளை கொண்ட மக்கள் பல்வேறு அணுகல்கள் மற்றும் வளங்களுக்கான அணுகலை பெற்று சமதர்ம சுகாதார முடிவுகளை பெறுவது. சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- சுகாதாரம் மற்றும் நல்வாழ்விற்கான சமதர்மத்தை நோக்கி பணியாற்றுதல்
- குறைவான சேவைகளை பெறும் சமூகங்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை அங்கீகரிப்பது

## எதிர்காலத்தின் சுகாதார ஊழியர்படையை உருவாக்குவது

மக்கள் மற்றும் whānau இன் தேவைகளுக்கு செவிசாய்க்கும் மற்றும் அது சேவை புரியும் சமூகங்களின் பிரதிநிதியாக செயல்படும் மீள்திறன் மற்றும் பன்முகத்தன்மை கொண்ட ஒரு நிலையான ஊழியர்படையை வளர்த்து மேம்படுத்துவது. சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- te ao Māori இன் அடிப்படையிலமைந்த மற்றும் அதனால் உருவமைப்பு செய்யப்பட்ட கலாச்சாரரீதியாக பாதுகாப்பான சேவைகள்
- சுகாதார ஊழியர்படையின் மீதான தாக்கம் குறைக்கப்படுகிறது மற்றும் ஊழியர்களுக்கு ஆதரவு கிடைக்கிறது

## பொருளாதாரரீதியில் நிலையான சுகாதார அமைப்பை உறுதிபடுத்துவது

தற்போதும் எதிர்காலத்திலும் கிடைக்கப்பெறுகின்ற வளங்கள் மற்றும் நிதியாதரவிற்குள் சிறந்த மக்கள்தொகை சுகாதாரம் மற்றும் சமதர்ம அளவுகளை உறுதிபடுத்தும் வகையில் வளங்கள் நிர்வகிக்கப்பட்டு ஒதுக்கப்படுவது. சீர்திருத்தப்பட்ட அமைப்பில் இது இவ்வாறு தோன்றலாம்:

- பராமரிப்பு தொடர்வதற்கு ஏற்படும் ஊறு குறையும் வகையில் மாற்றம் கொண்டுவருவது
- நடப்பிலுள்ள முன்னுரிமைகள் மற்றும் திட்டங்கள் தொடரப்படுவது.